உ
சிவமயம்



யாழ் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திரு **ஜெகநாதன் அருளம்பலம்**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

**26.11.2016**

உ

சிவமயம்

# அமரர் திரு ஜெகநாதன் அருளம்பலம் அவர்கள்

அன்னை மடியில்
09 * 03 * 1962



ஈசன் அடியில்
27 * 10 * 2016

## திதி வெண்பா

ஆண்டு துர்முகி அமைந்த ஐப்பசித் திங்கள்
பூண்ட அபரபக்க திரயோதசியில் - மாண்பு
அருளம்பலம் மைந்தன் ஜெகநாதன் ஐயன்
இருள்நிலை உலகுநீத்தார் காண்.

உ



பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தோத்திரமாலைத் தொகுப்பு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

## தேவாரம்

மாதர் பிறை கண்ணியானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந்தேத்தி, புகுவார் அவர் பின்புகு வேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய்ச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள் புரியாயே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பக கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனை
திருவழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்தனவே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை பொற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடிபோற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பாமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புண மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மனமருள் பெருமாளே

## கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

## பட்டினத்தார் பாடல்

கல்லாப்பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாய் பிழையுநின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே

## திருவருட்பா

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமான
பேய் பிடியா திருக்க வேண்டும்
மருவு பெண் ஆசையை மறக்க வேண்டும்
உனை மறவா திருக்க வேண்டும்
மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும் - நோயற்ற
வாழ்வு நான் வாழவேண்டும்
தண்முகத் துய்ய மணி உன்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்



# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

உ
சிவமயம்

# விநாயகர் அகவல்



திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச் நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவினை லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த னியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயத்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்

இருள்வெளி யிரண்டிக் கொன்றிட மென்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே

திருச்சிற்றம்பலம்



## அமரர் திரு ஜெகநாதன் அருளம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்துமா கடலில் முத்தெனத் திகழும் இலங்காபுரித்தீவின் தமிழீழ மண்ணின் தலையாம் யாழ்ப்பாணத்தில் கல்வியில் சிறந்து விளங்கும் கல்வியங்காடு என்னும் ஊரில் திரு. அருளம்பலமும் அவரின் துணைவி அன்னமலரும் செய்த தவப்பயனால் தன்னலமற்ற நன்மகனாக 5வது பிள்ளையாக 09 மார்ச் 1962ல் ஜெகநாதன் அவதரித்தார். திரு. ஜெகநாதன் அவர்களுக்கு பாசமும் அன்பும் நிறைந்த சகோதரிகளாக விமலாதேவி, ரஞ்சினிதேவி, கருணாதேவி, சாந்தினிதேவி, நந்தினி, ரூபி ஆகியோரும், சகோதரர் கதிர்காமநாதனும் அமைந்தனர்.

ஜெகநாதன் அவர்கள் தாயின் மடியில் தவழ்ந்து தளிர் நடைபோட்டு பள்ளிப் பருவத்தை எய்தினார். ஜெகன் என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர் கோப்பாய் மத்திய மகா வித்தியாலத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்று பின்பு இந்துக் கல்லூரியில் தனது உயர் கல்வியைக் கற்றார். உள்நாட்டில் போர் நிலை காரணமாக 1979இல் Germanyல் குடியேறினார்.

இவர் அயராது உழைத்து சகோதரிகளின் நல்வாழ்வுக்கு உதவினார். அனைவரையும் அன்பினாலும் பண்பினாலும் செயற்திறமையினாலும் கவர்ந்து கொண்டு 27.10.16 அன்று இறைவனடி சேர்ந்தார். நல்லவர்கள் நீண்ட காலம் வாழ்வதில்லை என்ற வாக்கிற்கமைய இவ்வுலக வாழ்வை நீத்த அன்னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



# சிந்திய கண்ணீரில்...

சிந்திய கண்ணீரில்
சிதறுகிறது உம் நினைவுகள்
சித்தம் கலங்கி சோகமாய் நிற்கிறோம்
உம் பாசப் பிணைப்புக்காய் - உம்மை
காலத்தின் கட்டாயம் காவிக் கொண்டு சென்றாலும்
எமது மௌனம் இன்னும் மாறவில்லை உமை நினைத்து

கடந்த காலங்கள் மீட்டும்
உணர்வுகள்
அதில் உதயமாகும் உங்கள்
பாசமான நினைவுகள்

ஒவ்வொரு முறையும்
உம்மைப் பார்க்கும் போது
நீர் தந்தது புன்முறுவல்
இம்முறை மட்டும் மௌனமாய்
படுத்துறங்கினீர் அப்போது தான்
எதுவும் நிஜமில்லை என்று
எங்களை தேற்றிக் கொண்டோம்.

உங்கள் பூதவுடல்
எமை விட்டு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களிலிருந்து
ஒருபோதும் அஸ்தமிப்பதில்லை
சித்தம் நிமலனடி தொழுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் பிரிவில் துயரப்படும்
நந்தினி, குணதாசன்.

# மருமக்கள் புலம்பல்

மாமா எங்கள் ஆசைமாமா

குண்டுமாமா என எல்லா மருமக்களாலும்

செல்லமாக அழைக்கப் பெற்றவரே.

எங்களை விட்டுத் தனியே நெடுந்தூரம்

சென்றாலும் குறையாது உம்மேல்

நாம் வைத்த அன்பு.

உன் பிரிவால் வாடும்

மருமக்கள்

நாம் Germanyக்கு எப்ப வந்தாலும் பேரதிர்ச்சியுடன் எங்களை பார்ப்பீர்களே! நாங்கள் உங்களைப் பார்க்க வந்தனாங்கள் என்று சொல்ல உன் குறும் புன்னகையுடன் ஏன் இப்ப வந்தனீங்கள் என்று கோவித்து கொண்டு கேட்பீர்கள். ஏனென்றால் மருமக்களை தனியே London இல் விட்டு வந்ததிற்காக.

உன் பிரிவில் வாடி நிற்கும்
மைத்துனர்கள்

# Gundu Mama,

What can I say about you?
You came in and walked away.
You complained to me about me,
You asked for tea.
You told me off for calling you gundu,
But that was my name for you.
Gundu mama, I may not have seen you every day,
But you are always in my heart.
My memories of you are not always good ones,
My memories of you are not always good ones,
But I am so happy that
we were able to make memories together.
I am glad you met my children, and
That they have some memories of you.
I will miss you so much Gundu mama.
My children will miss their Gundu Thatha.


May you find happiness in your soul.
Love you always,
Nathan, Suja, Denoshan and Harrshan.

# கண்ணீர் அஞ்சலி

திரு ஜெகநாதன் அருளம்பலம்

இதயத்தின் தூறலில் உயிர் பிரிந்து போனதே
நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனதே
நோய் என்னும் கொடியவன் வந்து
உன்னை ஆட்கொண்டானோ!
யார் கண்டார் இப்படி ஆகுமென்று
விதி யாரைத்தான் விட்டு வைத்தது.
இங்கு காலனவன் கண் திறந்து
உன் கண்ணை மூடினானோ!
ஆண்டவன் அழைப்பில் யாருமே தப்பியதில்லை.
மாண்டவர் என்றும் மீண்டு வருவதில்லை.
கண் இருக்கு மணி இல்லை. காத்திருக்க உயிரில்லை.
உறவிற்கு நீ இங்கு அருகில் இல்லை.
உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

இங்கனம்
உறவினர்கள்.




அன்னமலர் + அருளம்பலம்
விமலாதேவி + கமலநாதன்
சாருமதி
சுகன் + சிந்து
நஜீதா
லீவன்
கதிர்காமநாதன் + றஜவி
மிசா
மிதுன்
அஜன்
ரஞ்சினிதேவி + புஸ்பராஜா
பிரியன்
பிரதீபன்
பிரசன்
கருணாதேவி + பாலஸ்கந்தன்
சுஜா + வைரவநாதன்
டினோசன்
தட்சன்
நிருஜா
சிந்து
ஜெகநாதன்
சாந்தினிதேவி + பரமேஸ்வரன்
நிருஜன்
நிவேதன்
பிரியங்கா
நந்தினி + குணதாசன்
ரூபி + சிவகுமார்
கிருஷ்ணவி
நிருசன்

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !



# நன்றி நவிலல்

எமது அன்புக்கும் பாசத்துக்கும் உரிய எமது குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்த திரு ஜெகநாதன் அருளம்பலம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து எமக்கு மன ஆறுதல் கூறியோர்க்கும், உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து தபால், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மரணச் சடங்கின்போது பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக் கிரிகைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், அந்தியேட்டி கிரியை, வீட்டுக்கிரியைகளிலும் பங்குகொண்ட உற்றார் உறவினர்கள் நண்பர்களுக்கும், இறுதியாக இந்த இனிய நினைவு மலரை குறுகிய காலத்திலே அச்சிட்டு உதவிய JR Print அச்சகத்தாருக்கும் எமது உள்ளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
**குடும்பத்தினர்.**

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print www.jrdigitals.com T : 0208 503 6643